செய்தி வெளியீடு எண்-552 நாள்-25.8.2007

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களிடம் மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன் அவர்கள் அமெரிக்க பயணம் செய்வதையொட்டி 24.08.2007 அன்று கோபாலபுர இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

நெனோ தொழில்நுட்பத்தின் பயன்பாடு இன்று தொழில், பாதுகாப்பு, நல்வாழ்வுத் துறைகளில் பெருமளவில் வளர்ந்து வருகிறது. 11வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நடுவண் அரசு ரூபாய் ஆயிரம் கோடியில் இத்தொழில்நுட்பத்தை வளர்த்தெடுப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. நெனோ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இதய நோய், சர்க்கரை நோய், ஈரல் நோய், புற்றுநோய், வாத நோய் ஆகியவற்றுக்கு சிகிச்சை அளிக்கும் முறைகளை அமெரிக்காவின் ஆர்கன்சாஸ் பல்கலைக்கழகம் ஆய்வு செய்து பல தொழில்நுட்ப சிகிச்சை முறைகளை வகுத்துள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் நெனோ தொழில்நுட்பத் துறை இயக்குனர் பேராசிரியர் விஜய் கே.வரதன் அவர்கள் ஜுன் மாதம் மாநிலத் திட்டக்குழுவிற்கு மத்திய பாதுகாப்பு துறை அறிவியல் ஆலோசகர் திரு.சிவதாணுபிள்ளை அவர்களுடன் வந்து இத்தொழில்நுட்ப முறைகளை தமிழ் நாடு பெறுவது குறித்து விவாதித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மேற்கூறிய நோய்களுக்கான சிகிச்சை முறைகளை குறைந்த செலவில் அளிப்பதற்கு இத்தொழில்நுட்பத்ததை பயன்படுத்துவதற்கு ஆர்வம் காட்டி வருகிறார். இத்தொழில்நுட்ப மையம் பாரதியார் பல்கலைக் கழகத்தில் உயிரியல் ஆய்வு துறையில் இடம் பெறுவதற்கு 2007-08 நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெனோ தொழில்நுட்ப மையத்தின் இயக்குனர் இத்தொழில்நுட்பம் விரைவில் தமிழகத்தின் மக்கள் நல்வாழ்வுத் துறையில் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை நேரில் கண்டறிவதற்கு வருமாறு விடுத்த அழைப்பின் பேரில் திட்டக்குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன் அவர்களும், பாரதியார் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க.திருவாசகம் அவர்களும் இன்று அமெரிக்க பயணம் செல்கின்றனர்.

வெளியீடு – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.